# nannUl of pavaNati munivar (in tamil script, unicode format)

நன்னூல்
பவணந்தி முனிவர்

Etext preparation: Dr. Thomas Malten, Inst. of Indology and Tamil Studies, Univ of Koeln, Germany

The etxt initially prepared in transliterated format was converted to TSCII format using the Text Convertor of Mani Manivannan and was set to conform to the version edited by Mani Thirunavukkarasu Mudaliar, published by vaviLla Ramasamy Sasturulu &Sons, Madras, India, 1926.
Proof-reading: Mr. N.D. Logasundaram, Chennai, Tamilnadu, India
Web and PDF versions: Mr. N.D. Logasundaram, Chennai, Tamilnadu, India & Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland, respectively

This webpage presents the Etext in

Tamil script but in Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:
i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer
and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages (Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil fontchosen

as the default font for the UTF-8 char-set/encoding view.
. In case of difficulties send an email request to
kalyan@geocities.com or
kumar@vt.edu

© Project Madurai 1999 - 2003
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website

**http://www.projectmadurai.org/**
You are welcome to freely

distribute this file, provided this header page is kept intact.

---

# நன்னூல்
# (பவணந்தி முனிவர் )

## சிறப்புப் பாயிரம்

மலர் தலை உலகின் மல்கு
இருள் அகல
இலகு ஒளி பரப்பி யாவை உம்
விளக்கும்
பரிதி இன் ஒரு தான் ஆகி
முதல் ஈறு
ஒப்பு அளவு ஆசை முனிவு
இகந்து உயர்ந்த
அற்புத மூர்த்தி தன் அலர்தரு
தன்மையின் (5)

மன இருள் இரிய மாண்
பொருள் முழுவது உம்
முனிவு அற அருளிய மூ அறு
மொழி உள் உம்
குண கடல் குமரி குடகம்
வேங்கடம்
எனும் நான்கு எல்லையின்
இரும் தமிழ் கடல் உள்
அரும் பொருள் ஐந்து ஐ உம் (10)
யாவர் உம் உணர
தொகை வகை விரியின் தருக
என துன்னார்
இகல் அற நூறி இரு நிலம்
முழுவது உம்
தனது என கோலி தன் மத
வாரணம்
திசை தொறு உம் நிறுவிய திறல்
உறு தொல் சீர்

கரும் கழல் வெண் குடை கார்
நிகர் வண் கை
திருந்திய செங்கோல் சீயகங்கன்
அரும் கலை விநோதன் அமரா
பரணன்
மொழிந்தனன் ஆக முன்னோர்
நூலின்
வழி ஏ நன்னூல் பெயரின்
வகுத்தனன்
பொன் மதில் சனகை சன்மதி
முனி அருள்

பன்ன அரும் சிறப்பின்
பவணந்தி
என்னும் நாமத்து இரும்
தவத்தோன் ஏ

## 1. பொதுப் பாயிரம்

முகவுரை பதிகம் அணிந்துரை
நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை
பாயிரம் 1
பாயிரம் பொது சிறப்பு என இரு
பாற்று ஏ 2
நூல் ஏ நுவல்வோன் நுவலும்
திறன் ஏ
கொள்வோன் கோடல் கூற்று ஆம்
ஐந்து உம்
எல்லா நூல் கு உம் இவை பொது
பாயிரம் 3

## 1.1. நூலினது வரலாறு

நூலின் இயல்பு ஏ நுவலின் ஓர்
இரு
பாயிரம் தோற்றி மும்மையின்

ஒன்று ஆய்
நால் பொருள் பயத்து ஒடு எழு
மதம் தழுவி
ஐ இரு குற்றம் உம் அகற்றி அ
மாட்சி ஒடு
எண் நான்கு உத்தியின் ஒத்து
படலம்
என்னும் உறுப்பின் இல் சூத்திரம்
காண்டிகை
விருத்தி ஆகும் விகற்ப நடை
பெறும் ஏ 4
முதல் வழி சார்பு என நூல் மூன்று
ஆகும் 5
அவற்று உள்
வினை இன் நீங்கி விளங்கிய
அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல்
ஆகும் 6

முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு
ஒத்து
பின்னோன் வேண்டும் விகற்பம்
கூறி
அழியா மரபினது வழிநூல்
ஆகும் 7
இருவர் நூல் கு உம் ஒரு சிறை
தொடங்கி
திரிபு வேறு உடையது புடைநூல்
ஆகும் 8
முன்னோர் மொழி பொருள் ஏ
அன்றி அவர் மொழி உம்
பொன் ஏ போல் போற்றுவம்
என்பதன் உம் - முன்னோர் இன்
வேறு நூல் செய்தும் எனும்
மேற்கோள் இல் என்பதன் கு உம்
கூறு பழம் சூத்திரத்தின் கோள் 9

அறம் பொருள் இன்பம் வீடு 10
அடைதல் நூல் பயன் ஏ

எழு வகை மதம் ஏ உடன்படல்
மறுத்தல்
பிறர் தம் மதம் மேற்கொண்டு
களைவு ஏ
தாஅன் நாட்டித் தனாது நிறுப்பு ஏ
இருவர் மாறுகோள் ஒரு தலை
துணிவு ஏ
பிறர் நூல் குற்றம் காட்டல் ஏனை
பிறிதொடு படாஅன் தன் மதம்
கொளல் ஏ
11

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக்
கூறல்
வழூஉச்சொல் புணர்த்தல் மயங்க
வைத்தல்
வெற்று எனத் தொடுத்தல் மற்று

ஒன்று விரித்தல்
சென்று தேய்ந்து இறுதல் நின்று
பயன் இன்மை
என்று இவை ஈர் ஐம் குற்றம் நூல் 12
கு ஏ
சுருங்கச் சொல்லல் விளங்க
வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நல்
மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழம் உடைத்து
ஆதல்
முறையின் வைப்பு ஏ உலகம்
மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு
உதாரணத்தது
ஆகுதல் நூலின் கு அழகு எனும்
பத்து ஏ 13
நுதலிப் புகுதல் ஓத்து முறை

வைப்பு ஏ
தொகுத்துச் சுட்டல் வகுத்துக்
காட்டல்
முடித்துக் காட்டல் முடிவு இடம்
கூறல்
தான் எடுத்து மொழிதல் பிறன்
கோள் கூறல்
சொல் பொருள் விரித்தல்
தொடர்ச்சொல் புணர்த்தல் (5)
இரட்டுற மொழிதல் ஏதுவின்
முடித்தல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந்து
ஒழுகல்
இறந்தது விலக்கல் எதிரது
போற்றல்
முன் மொழிந்து கோடல் பின்னது
நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது

முடித்தல் (10)
உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
ஒரு தலை துணிதல்
எடுத்துக்காட்டல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்
இன்னது அல்லது இது என மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல் (15)
பிற நூல் முடிந்தது தான் உடன்படுதல்
தன் குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல்
சொல்லின் முடிவின் அப் பொருள் முடித்தல்
ஒன்று இனம் முடித்தல் தன் இனம்

முடித்தல்
உய்த்துணர வைப்பு என உத்தி
எண் நான்கு ஏ (20) 14

நூல் பொருள் வழக்கு ஒடு
வாய்ப்ப காட்டி
ஏற்புழி அறிந்து இதன் கு இ
வகை ஆம் என
தகும் வகை செலுத்துதல் தந்திர
உத்தி 15
நேர் இன மணி ஐ நிரல்பட
வைத்தாங்கு
ஓர் இன பொருள் ஐ ஒரு வழி
வைப்பது
ஓத்து என மொழிப உயர் மொழி
புலவர் 16
ஒரு நெறி இன்றி விரவிய
பொருள் ஆல்
பொது மொழி தொடரின் அது

படலம் ஆகும் 17

சில் வகை எழுத்து இல் பல் வகை
பொருள் ஐ
செவ்வன் ஆடி இன் செறித்து
இனிது விளக்கி
திட்பம் நுட்பம் சிறந்தன சூத்திரம் 18
ஆற்று ஒழுக்கு அரிமா நோக்கம்
தவளைப்
பாய்த்து பருந்தின் வீழ்வு அன்ன
சூத்திர நிலை 19
பிண்டம் தொகை வகை குறி ஏ
செய்கை
கொண்டு இயல் புறனடை
கூற்றன சூத்திரம் 20

பாடம் கருத்து ஏ சொல் வகை
சொல் பொருள்
தொகுத்துரை உதாரணம் வினா

விடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயன்
ஒடு
ஆசிரியவசனம் என்ற ஈர் ஏழ் 21
உரை ஏ

கருத்து பதப்பொருள் காட்டு
மூன்றின் உம்
அவற்று ஒடு வினா விடை
ஆக்கல் ஆன் உம்
சூத்திரத்து உள் பொருள்
தோற்றுவ காண்டிகை 22

சூத்திரத்து உள் பொருள் அன்றி
உம் ஆண்டை கு
இன்றி அமையா யாவை உம்
விளங்க
தன் உரை ஆன் உம் பிற நூல்
ஆன் உம்
ஐயம் அகல ஐம் காண்டிகை

உறுப்பு ஒடு
மெய்யின் ஐ எஞ்சாது இசைப்பது 23
விருத்தி
பஞ்சி தன் சொல் ஆ பனுவல்
இழை ஆக
செம் சொல் புலவன் ஏ சேயிழை
ஆ - எஞ்சாத
கை ஏ வாய் ஆக கதிர் ஏ மதி ஆக
மை இலா நூல் முடியும் ஆறு
24

உரத்தின் வளம் பெருக்கி
உள்ளிய தீமை
புரத்தின் வளம் முருக்கி பொல்லா
- மரத்தின்
கன கோட்டம் தீர்க்கும் நூல்
அஃது ஏ போல் மாந்தர்
மன கோட்டம் தீர்க்கும் நூல்
மாண்பு 25

## 1.2. ஆசிரியனது வரலாறு

குலன் அருள் தெய்வம் கொள்கை
மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை
வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர்
நிகர் மாட்சி உம்
உலகு இயல் அறிவு ஒடு உயர்
குணம் இனைய உம்
அமைபவன் நூல் உரை
ஆசிரியன் ஏ 26
தெரிவு அரும் பெருமை உம்
திண்மை உம் பொறை உம்
பருவ முயற்சி அளவு இல்
பயத்தல் உம்
மருவிய நல் நில மாண்பு ஆகும்
ஏ 27

அளக்கல் ஆகா அளவு உம்
பொருள் உம்
துளக்கல் ஆகா நிலை உம்
தோற்றம் உம்
வறப்பின் உம் வளம் தரும்
வண்மை உம் மலை கு ஏ 28
ஐயம் தீர பொருள் ஐ உணர்த்தல்
உம்
மெய் நடு நிலை உம் மிகும்
நிறைகோல் கு ஏ 29
மங்கலம் ஆகி இன்றி அமையாது
யாவர் உம் மகிழ்ந்து மேற்கொள
மெல்கி
பொழுதின் முகம் மலர்வு
உடையது பூ ஏ 30
மொழி குணம் இன்மை உம் இழி
குண இயல்பு உம்
அழுக்காறு அவா வஞ்சம் அச்சம்

ஆடல் உம்
கழல் குடம் மடல் பனை பருத்தி
குண்டிகை
முட தெங்கு ஒப்பு என முரண்
கொள் சிந்தை உம்
உடையோர் இலர் ஆசிரியர் 31
ஆகுதல் ஏ
பெய்த முறை அன்றி பிறழ உடன்
தரும்
செய்தி கழல் பெய் குடத்தின் சீர்
ஏ
32

தான் ஏ தர கொளின் அன்றி தன்
பால்
மேவி கொள கொடா இடத்தது
மடல் பனை 33
அரிதின் பெய கொண்டு அ
பொருள் தான் பிறர் கு

எளிது ஈவு இல்லது பருத்தி 34
குண்டிகை
பல் வகை உதவி வழிபடு
பண்பின்
அல்லோர் கு அளிக்குமது முட 35
தெங்கு ஏ

## 1.3. பாடஞ்சொல்லலின் வரலாறு

ஈதல் இயல்பு ஏ இயம்பும்
காலை
காலம் உம் இடன் உம்
வாலிதின் நோக்கி
சிறந்த உழி இருந்து தன்
தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள்
உள்ளத்து அமைத்து

விரையான் வெகுளான்
விரும்பி முகம் மலர்ந்து
கொள்வோன் கொள் வகை
அறிந்து அவன் உளம் கொள
கோட்டம் இல் மனத்தின் நூல்
கொடுத்தல் என்ப 36

## 1.4. மாணாக்கனது வரலாறு

தன் மகன் ஆசான் மகன் ஏ மன்
மகன்
பொருள் நனி கொடுப்போன்
வழிபடுவோன் ஏ
உரைகோளாளன் கு உரைப்பது
நூல் ஏ 37
அன்னம் ஆ ஏ மண் ஒடு கிளி ஏ
இல்லி குடம் ஆடு எருமை நெய்
அரி

அன்னர் தலை இடை கடை
மாணாக்கர் 38
களி மடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன்
சினத்தன்
துயில்வோன் மந்தன் தொல் நூல்
கு அஞ்சி
தடுமாறு உளத்தன் தறுகணன்
பாவி
படிறன் இன்னோர் கு பகரார் நூல்
ஏ 39

## 1. 5. பாடம் கேட்டலின் வரலாறு

கோடல் மரபு ஏ கூறும் காலை
பொழுது ஒடு சென்று வழிபடல்
முனியான்
குணத்து ஒடு பழகி அவன்

குறிப்பின் சார்ந்து
இரு என இருந்து சொல் என
சொல்லி
பருகுவன் அன்ன ஆர்வத்தன்
ஆகி
சித்திர பாவை இன் அ தகவு
அடங்கி
செவி வாய் ஆக நெஞ்சு களன்
ஆக
கேட்டவை கேட்டு அவை
விடாது உளத்து அமைத்து
போ என போதல் என்மனார்
புலவர்
நூல் பயில் இயல்பு ஏ நுவலின்
வழக்கு அறிதல்
பாடம் போற்றல் கேட்டவை
நினைத்தல்
ஆசான் சார்ந்து அவை அமைவர

கேட்டல்
அ மாண்பு உடையோர் தம் ஒடு
பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல்
என்ற இவை
கடன் ஆ கொளின் ஏ மடம் நனி
இகக்கும் 41
ஒரு குறி கேட்போன் இரு கால்
கேட்பின்
பெருக நூல் இல் பிழைபாடு
இலன் ஏ 42
மு கால் கேட்பின் முறை அறிந்து
உரைக்கும் 43
ஆசான் உரைத்தது அமைவர
கொளின் உம்
கால் கூறு அல்லது பற்றலன்
ஆகும் 44
அ வினையாளர் ஒடு பயில் வகை

ஒரு கால்
செவ்விதின் உரைப்ப அவ் இரு
கால் உம்
மை அறு புலமை மாண்பு 45
உடைத்து ஆகும்
அழல் இன் நீங்கான் அணுகான்
அஞ்சி
நிழல் இன் நீங்கான் நிறைந்த
நெஞ்சம் ஒடு
எ திறத்து ஆசான் உவக்கும் அ
திறம்
அறத்து இன் திரியா படர்ச்சி
வழிபாடு ஏ
46

## 1. 6. சிறப்புப் பாயிரத்திலக்கணம்

ஆக்கியோன் பெயர் ஏ வழி ஏ

எல்லை
நூல் பெயர் யாப்பு ஏ நுதலிய
பொருள் ஏ
கேட்போர் பயன் ஒடு ஆய் எண்
பொருள் உம்
வாய்ப்ப காட்டல் பாயிரத்து
இயல்பு ஏ 47
காலம் களன் ஏ காரணம் என்று இ
மூ வகை ஏற்றி மொழிநர் உம்
உளர் ஏ 48
முதல்நூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள் செய்வித்தோன் தன்மை
முதல் நிமித்தின் உம்
இடுகுறி ஆன் உம் நூல் கு
எய்தும் பெயர் ஏ 49
தொகுத்தல் விரித்தல் தொகைவிரி
மொழிபெயர்ப்பு
என தகும் நூல் யாப்பு ஈர்

இரண்டு என்ப 50

தன் ஆசிரியன் தன் ஒடு கற்றோன்

தன் மாணாக்கன் தகும்

உரைகாரன் என்ற

இன்னோர் பாயிரம் இயம்புதல்

கடன் ஏ 51

தோன்றா தோற்றி துறை பல

முடிப்பின் உம் 52

தான் தன் புகழ்தல் தகுதி அன்று ஏ

மன் உடை மன்றத்து

ஒலைத்தூக்கின் உம்

தன் உடை ஆற்றல் உணரார்

இடையின் உம்

மன்னிய அவை இடை வெல்லுறு

பொழுதின் உம்

தன் ஐ மறுதலை பழித்த காலை

உம்

தன் ஐ புகழ்தல் உம் தகும்

புலவோன் கு ஏ 53
ஆயிரம் முகத்து ஆன் அகன்றது
ஆயின் உம்
பாயிரம் இல்லது பனுவல் அன்று
ஏ 54
மாட கு சித்திரம் உம் மா நகர் கு
கோபுரம் உம்
ஆடு அமை தோள் நல்லார் கு
அணி உம் போல் - நாடி முன்
ஐது உரையாநின்ற அணிந்துரை
ஐ என நூல் கு உம்
பெய்து உரையா வைத்தார்
பெரிது
55

## 2. எழுத்ததிகாரம்

### 2.1. எழுத்தியல்

பூ மலி அசோகின் புனை நிழல் அமர்ந்த
நான்முகன் தொழுது நன்கு
இயம்புவன் எழுத்து ஏ 56
எண் பெயர் முறை பிறப்பு
உருவம் மாத்திரை
முதல் ஈறு இடைநிலை போலி என்றா
பதம் புணர்பு என பன்னிரு பாற்று
அது ஏ 57

## 2.1.1.எண்

மொழி முதல் காரணம் ஆம்
அணு திரள் ஒலி
எழுத்து அது முதல் சார்பு என
இரு வகைத்து ஏ 58
உயிர் உம் உடம்பு உம் ஆம்

முப்பது உம் முதல் ஏ 59
உயிர்மெய் ஆய்தம் உயிரளபு
ஒற்றளபு
அஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்து உம் சார்பெழுத்து
ஆகும் 60
உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு
உயர் ஆய்தம்
எட்டு உயிரளபு எழு மூன்று
ஒற்றளபெடை
ஆறு ஏழ் அஃகும் இ முப்பான்
ஏழ்
உகரம் ஆறு ஆறு ஐகான் மூன்று
ஏ
ஔகான் ஒன்று ஏ மஃகான்
மூன்று ஏ
ஆய்தம் இரண்டு ஒடு
சார்பெழுத்து உறு விரி

ஒன்று ஒழி முந்நூற்று எழுபான்
என்ப 61

## 2.1.2. பெயர்

இடுகுறி காரண பெயர் பொது
சிறப்பின 62

அ முதல் ஈர் ஆறு ஆவி க முதல்
மெய் மூ ஆறு என விளம்பினர்
புலவர் 63

அவற்று உள்
அ இ உ எ ஒ குறில் ஐந்து ஏ 64

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில் 65

அ இ உ முதல் தனி வரின் சுட்டு
ஏ 66

எ யா முதல் உம் ஆ ஓ ஈற்று உம்
ஏ இரு வழி உம் வினா ஆகும் ஏ 67

வல்லினம் க ச ட த ப ற என ஆறு 68
ஏ
மெல்லினம் ங ஞ ண ந ம ன என
ஆறு ஏ 69
இடையினம் ய ர ல வ ழ ள என
ஆறு ஏ 70
ஐ ஔ இ உ செறிய முதலெழுத்து
இவ் இரண்டு ஓர் இனம் ஆய்
வரல் முறை ஏ 71
தானம் முயற்சி அளவு பொருள்
வடிவு
ஆன ஒன்று ஆதி ஓர் புடை ஒப்பு
இனம் ஏ 72

## 2.1.3. முறை

சிறப்பின் உம் இனத்தின் உம்
செறிந்து ஈண்டு அ முதல்

நடத்தல் தான் ஏ முறை ஆகும்
ஏ 73

## 2.1.4. பிறப்பு

நிறை உயிர் முயற்சியின் உள்
வளி துரப்ப
எழும் அணு திரள் உரம் கண்டம்
உச்சி
மூக்கு உற்று இதழ் நா பல் அண
தொழிலின்
வெவ்வேறு எழுத்து ஒலி ஆய்
வரல் பிறப்பு ஏ 74

அ வழி
ஆவி இடைமை இடம் மிடறு
ஆகும்
மேவும் மென்மை மூக்கு உரம்
பெறும் வன்மை 75

அவற்று உள்
முயற்சி உள் அ ஆ அங்காப்பு
உடைய 76

இ ஈ எ ஏ ஐ அங்காப்பு ஒடு
அண் பல் முதல் நா விளிம்பு உற
வரும் ஏ 77

உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவு ஏ 78

க ங உம் ச ஞ உம் ட ண உம்
முதல் இடை
நுனி நா அண்ணம் உற முறை
வரும் ஏ 79

அண் பல் அடி நா முடி உற த ந
வரும் 80

மீ கீழ் இதழ் உற ப ம பிறக்கும் 81

அடி நா அடி அணம் உற ய
தோன்றும் 82

அண்ணம் நுனி நா வருட ர ழ

வரும் 83

அண் பல் முதல் உம் அண்ணம்
உம் முறையின்
நா விளிம்பு வீங்கி ஒற்ற உம்
வருட உம்
லகாரம் ளகாரம் ஆய் இரண்டு
உம் பிறக்கும் 84

மேல் பல் இதழ் உற மேவிடும் வ
ஏ 85

அண்ணம் நுனி நா நனி உறின் ற
ன வரும் 86

ஆய்த கு இடம் தலை அங்கா
முயற்சி
சார்பெழுத்து ஏன உம் தம் முதல்
அனைய 87

எடுத்தல் படுத்தல் நலிதல்
உழப்பில்

திரிபு உம் தத்தமின் சிறிது உள 88
ஆகும்

புள்ளி விட்டு அ ஒடு முன் உரு
ஆகி உம்

ஏனை உயிர் ஒடு உருவு திரிந்து
உம்

உயிர் அளவு ஆய் அதன் வடிவு
ஒழித்து இரு வயின்

பெயர் ஒடு உம் ஒற்று முன் ஆய் 89
வரும் உயிர்மெய்

குறியதன் முன்னர் ஆய்த புள்ளி
உயிர் ஒடு புணர்ந்த வல் ஆறன்
மிசைத்து ஏ 90

இசை கெடின் மொழி முதல்
இடை கடை நிலை நெடில்
அளபு எழும் அவற்று அவற்று
இன குறில் குறி ஏ 91

ங ஞ ண ந ம ன வ ய ல ள

ஆய்தம்
அளபு ஆம் குறில் இணை குறில்
கீழ் இடை கடை
மிகல் ஏ அவற்றின் குறி ஆம் 92
வேறு ஏ
யகரம் வர குறள் உ திரி இகரம்
உம்
அசைச்சொல் மியாவின் இகரம்
உம் குறிய
93

நெடில் ஓடு ஆய்தம் உயிர் வலி
மெலி இடை
தொடர் மொழி இறுதி வன்மை
ஊர் உகரம்
அஃகும் பிற மேல் தொடர உம்
பெறும் ஏ 94
தன் சுட்டு அளபு ஒழி ஐ மூ வழி
உம்

நையும் ஔள உம் முதல் அற்று 95
ஆகும்
ண ன முன் உம் வஃகான் மிசை
உம் ம குறுகும்
96

ல ள ஈற்று இயைபின் ஆம்
ஆய்தம் அஃகும் 97

## 2.1.5. உருவம்

தொல்லை வடிவின எல்லா
எழுத்து உம் ஆண்டு
எய்தும் எகர ஒகர மெய் புள்ளி 98

## 2.1.6. மாத்திரை

மூன்று உயிரளபு இரண்டு ஆம்
நெடில் ஒன்று ஏ

குறில் ஒடு ஐ ஔ குறுக்கம்
ஒற்றளபு
அரை ஒற்று இ உ குறுக்கம்
ஆய்தம்
கால் குறள் மஃகான் ஆய்தம்
மாத்திரை 99
இயல்பு எழும் மாந்தர் இமை
நொடி மாத்திரை 100
ஆவி உம் ஒற்று உம் அளவு
இறந்து இசைத்தல் உம்
மேவும் இசை விளி
பண்டமாற்று ஆதியின் 101

## 2.1.7. முதநிலை

பன்னீர் உயிர் உம் க ச த ந ப ம
வ ய
ஞ ங ஈர் ஐந்து உயிர்மெய் உம்

மொழி முதல் 102
உ ஊ ஒ ஓ அல ஒடு வ முதல் 103

அ ஆ உ ஊ ஓ ஔ ய முதல் 104
அ ஆ எ ஒ ஓடு ஆகும் ஞ முதல் 105
சுட்டு யா எகர வினா வழி அ ஐ
ஒட்டி ங உம் முதல் ஆகும் ஏ 106

## 2.1.8. இறுதிநிலை

ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ
ள மெய்
சாயும் உகரம் நால் ஆறு உம்
ஈறு ஏ 107
குற்று உயிர் அளபின் ஈறு ஆம்
எகரம்
மெய் ஒடு ஏலாது ஒ ந ஒடு ஆம்
ஔ

ககர வகரம் ஒடு ஆகும் என்ப 108
நின்ற நெறி ஏ உயிர்மெய் முதல்
ஈறு ஏ 109

## 2.1.9. இடைநிலை மயக்கம்

க ச த ப ஒழித்த ஈர் ஏழன்
கூட்டம்
மெய்ம்மயக்கு உடனிலை ர ழ
ஒழித்து ஈர் எட்டு
ஆகும் இவ் இரு பால் மயக்கு
உம் மொழி இடை
மேவும் உயிர் மெய் மயக்கு 110
அளவு இன்று ஏ
ங முன் க ஆம் வ முன் ய ஏ 111
ஞ ந முன் தம் இனம் யகரம் ஒடு
ஆகும் 112
ட ற முன் க ச ப மெய் உடன்

மயங்கும் 113
ண ன முன் இனம் க ச ஞ ப ம
ய வ வரும் 114
ம முன் ப ய வ மயங்கும் என்ப 115
ய ர ழ முன்னர் மொழி முதல்
மெய் வரும் 116
ல ள முன் க ச ப வ ய ஒன்றும்
ஏ 117
ர ழ அல்லன தம் முன் தாம்
உடன் நிலையும் 118

ய ர ழ ஒற்றின் முன் க ச த ப ங
ஞ ந ம
ஈர் ஒற்று ஆம் ர ழ தனி குறில்
அணையா 119
ல ள மெய் திரிந்த ன ண முன்
மகாரம்
நைந்து ஈர் ஒற்று ஆம் செய்யுள்

உள் ஏ 120

தம் பெயர் மொழியின் முதல்
உம் மயக்கம் உம்
இ முறை மாறி உம் இயலும்
என்ப 121

## 2.1.10.போலி

மகர இறுதி அஃறிணை
பெயரின்
னகரம் ஒடு உறழா நடப்பன
உள ஏ 122

அ ஐ முதல் இடை ஒக்கும் ச ஞ
ய முன் 123

ஐகான் ய வழி ந ஒடு சில் வழி
ஞஃகான் உறழும் என்மர் உம் 124
உளர் ஏ

அ முன் இகரம் யகரம் என்ற

இவை
எய்தின் ஐ ஒத்து இசைக்கும் அ
ஒடு 125
உ உம் வ உம் ஔ ஓர் அன்ன
மெய்கள் அகரம் உம் நெட்டு
உயிர் காரம் உம்
ஐ ஔ கான் உம் இருமை குறில்
இவ்
இரண்டு ஒடு கரம் உம் ஆம்
சாரியை பெறும் பிற 126
மொழி ஆய் தொடரின் உம் 127
முன் அனைத்து எழுத்து ஏ

## **2.2.** பதவியல்

### 2.2.1.பதம்

எழுத்து ஏ தனித்து உம்

தொடர்ந்து உம் பொருள் தரின்
பதம் ஆம் அது பகாப்பதம்
பகுபதம் என
இரு பால் ஆகி இயலும் என்ப 128
உயிர் ம இல் ஆறு உம் த ப ந
இல் ஐந்து உம்
க வ ச இல் நால் உம் ய இல்
ஒன்று உம்
ஆகும் நெடில் நொ து ஆம்
குறில் இரண்டு ஒடு
ஓர் எழுத்து இயல் பதம் ஆறு
ஏழ் சிறப்பின 129
பகாப்பதம் ஏழு உம் பகுபதம்
ஒன்பது உம்
எழுத்து ஈறு ஆக தொடரும்
என்ப 130

பகுப்பு ஆல் பயன் அற்று
இடுகுறி ஆகி

முன்னே ஒன்று ஆய் முடிந்து
இயல்கின்ற
பெயர் வினை இடை உரி
நான்கு உம் பகாப்பதம் 131
பொருள் இடம் காலம் சினை
குணம் தொழிலின்
வரு பெயர் பொழுது கொள்
வினை பகுபதம் ஏ 132
பகுதி விகுதி இடைநிலை
சாரியை
சந்தி விகாரம் ஆறின் உம்
ஏற்பவை
முன்னி புணர்ப்ப முடியும் எ
பதங்கள் உம் 133

## 2.2.2. பகுதி

தத்தம்

பகாப்பதங்கள் ஏ பகுதி ஆகும் 134
செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை
மேன்மை
திண்மை உண்மை நுண்மை
இவற்று எதிர்
இன்ன உம் பண்பு இன் பகா
நிலை பதம் ஏ 135
ஈறு போதல் இடை உகரம் இ
ஆதல்
ஆதி நீடல் அடி அகரம் ஐ ஆதல்
தன் ஒற்று இரட்டல் முன் நின்ற
மெய் திரிதல்
இனம் மிகல் இனைய உம்
பண்பின் கு இயல்பு ஏ 136
நட வா மடி சீ விடு கூ வே வை
நொ போ வெள உரிஞ் உண்
பொருந் திரும் தின்

தேய் பார் செல் வவ் வாழ் கேள்
அஃகு என்று
எய்திய இருபான் மூன்று ஆம்
ஈற்ற உம்
செய் என் ஏவல் வினை
பகாப்பதம் ஏ 137
செய் என் வினை வழி வி பி
தனி வரின்
செய்வி என் ஏவல் இணையின்
ஈர் ஏவல்
138
விளம்பிய பகுதி வேறு ஆதல்
உம் விதி ஏ 139

## 2.2.3. விகுதி

அன் ஆன் அள் ஆள் அர் ஆர்
ப மார்

அ ஆ கு டு து று என் ஏன் அல்
அன்
அம் ஆம் எம் ஏம் ஓம் ஒடு
உம் ஊர்
க ட த ற ஐ ஆய் இ மின் இர்
ஈர்
ஈயர் க ய உம் என்ப உம் பிற
உம்
வினையின் விகுதி பெயரின்
உம் சில ஏ 140

## 2.2.4. இடைநிலை

இலக்கியம் கண்டு அதன் கு
இலக்கணம் இயம்பலின்
பகுதி விகுதி பகுத்து இடை
நின்றது ஐ
வினைப்பெயர் அல் பெயர் கு

இடைநிலை எனல் ஏ 141
த ட ற ஒற்று இன் ஏ ஐம் பால் மூ
இடத்து
இறந்தகாலம் தரும் தொழில்
இடைநிலை 142
ஆநின்று கின்று கிறு மூ
இடத்தின்
ஐம் பால் நிகழ்பொழுது அறை
வினை இடைநிலை 143
ப வ மூ இடத்து ஐம் பால்
எதிர்பொழுது
இசை வினை இடைநிலை ஆம்
இவை சில இல 144
ற ஒடு உகர உம்மை நிகழ்பு
அல்ல உம்
த ஒடு இறப்பு உம் எதிர்வு உம்
ட ஒடு
கழிவு உம் க ஒடு எதிர்வு உம்

மின் ஏவல்
வியங்கோள் இ மார் எதிர்வு
உம் பாந்தம்
செலவு ஒடு வரவு உம் செய்யும்
நிகழ்பு எதிர்வு உம்
எதிர்மறை மும்மை உம் ஏற்கும்
ஈங்கு ஏ 145

## 2.2.5. வடமொழி ஆக்கம்

இடை இல் நான்கு உம் ஈற்று
இல் இரண்டு உம்
அல்லா அச்சு ஐ வருக்கம் முதல்
ஈறு
ய ஆதி நான்மை ள ஆகும் ஐ
ஐம்
பொது எழுத்து ஒழிந்த நால் ஏழு
உம் திரியும் 146

அவற்று உள்
ஏழ் ஆம் உயிர் இ உம் இரு உம்
ஐ வருக்கத்து
இடையின் மூன்று உம் அ அ
முதல் உம்
எட்டு ஏ ய உம் முப்பது ச ய
உம்
மேல் ஒன்று ச ட உம் இரண்டு ச
த உம்
மூன்று ஏ அ க உம் ஐந்து இரு க
உம் 147
ஆ ஈறு ஐ உம் ஈ ஈறு இகரம் உம்
ரவ்வின் கு அ முதல் ஆம் மு
குறில் உம்
லவ்வின் கு இ முதல் இரண்டு
உம் யவ்வின் கு
இ உம் மொழி முதல் ஆகி முன்
வரும் ஏ 148

இணைந்து இயல் காலை ய ர ல
கு இகரம் உம்
ம வ கு உகரம் உம் நகர கு
அகரம் உம்
மிசை வரும் ர வழி உ உம் ஆம் 149
பிற
ற ன ழ எ ஒ உம் உயிர்மெய்
உம் உயிரளபு
அல்லா சார்பு உம் தமிழ் பிற
பொது ஏ 150

## **2.3.** உயிரிற்றுப் புணரியல்

### 2.3.1. புணர்ச்சி

மெய் உயிர் முதல் ஈறு ஆம்
இரு பதங்கள் உம்
தன் ஒடு உம் பிறிது ஒடு உம்

அல்வழி வேற்றுமை
பொருளின் பொருந்துழி நிலை
வரு மொழிகள்
இயல்பு ஒடு விகாரத்து
இயைவது புணர்ப்பு ஏ 151
வேற்றுமை ஐ முதல் ஆறு ஆம்
அல்வழி
தொழில் பண்பு உவமை
உம்மை அன்மொழி
எழுவாய் விளி ஈர் எச்சம் முற்று
இடை உரி
தழுவுதொடர் அடுக்கு என ஈர்
ஏழ் ஏ 152
விகாரம் அனைத்து உம்
மேவலது இயல்பு ஏ 153
தோன்றல் திரிதல் கெடுதல்
விகாரம்
மூன்று உம் மொழி மூ இடத்து

உம் ஆகும் 154
வலித்தல் மெலித்தல் நீட்டல்
குறுக்கல்
விரித்தல் தொகுத்தல் உம் வரும்
செய்யுள் வேண்டுழி 155
ஒரு மொழி மூ வழி குறைதல்
உம் அனைத்து ஏ 156
ஒரு புணர் கு இரண்டு மூன்று
உம் உற பெறும்
157

## 2.3.2. பொதுப் புணர்ச்சி

எண் மூ எழுத்து ஈற்று எ வகை
மொழி கு உம்
முன் வரும் ஞ ந ம ய வக்கள்
இயல்பு உம்
குறில் வழி ய தனி ஐ நொ து

முன் மெலி
மிகல் உம் ஆம் ண ள ன ல வழி
ந திரியும் 158
பொது பெயர் உயர்திணை
பெயர்கள் ஈற்று மெய்
வலி வரின் இயல்பு ஆம் ஆவி
ய ர முன்
வன்மை மிகா சில விகாரம் ஆம்
உயர்திணை 159
ஈற்று யா வினா விளி பெயர்
முன் வலி இயல்பு ஏ 160
ஆவி ய ர ழ இறுதி முன்னிலை
வினை
ஏவல் முன் வல்லினம் இயல்பு
ஒடு விகற்பு ஏ 161

## 2.3.3. உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி

இ ஈ ஐ வழி ய உம் ஏனை
உயிர் வழி வ உம் ஏ முன் இவ்
இருமை உம்
உயிர் வரின் உடம்படுமெய்
என்று ஆகும் 162
எகர வினா மு சுட்டின் முன்னர்
உயிர் உம் யகரம் உம் எய்தின்
வ உம்
பிற வரின் அவை உம் தூக்கு
இல் சுட்டு
நீளின் யகரம் உம் தோன்றுதல்
நெறி ஏ 163
உயிர் வரின் உ குறள் மெய்
விட்டு ஓடும்
ய வரின் இ ஆம் முற்று உம்
அற்று ஒரோ வழி 164

## 2.3.4. உயிரீற்றுமுன் வல்லினம்

இயல்பின் உம் விதியின் உம்
நின்ற உயிர் முன்
க ச த ப மிகும் விதவாதன மன்
ஏ 165
மர பெயர் முன்னர் இன
மெல்லெழுத்து
வர பெறுன உம் உள வேற்றுமை
வழி ஏ 166
செய்யிய என்னும்
வினையெச்சம் பல் வகை
பெயரின் எச்சம் முற்று ஆறன்
உருபு ஏ
அஃறிணை பன்மை அம்ம முன்
இயல்பு ஏ 167
வாழிய என்பதன் ஈற்றின்
உயிர்மெய்

ஏகல் உம் உரித்து அஃது ஏகின் 168
உம் இயல்பு ஏ
சாவ என் மொழி ஈற்று
உயிர்மெய் சாதல் உம் விதி 169
பல சில எனும் இவை தம் முன்
தாம் வரின்
இயல்பு உம் மிகல் உம் அகரம்
ஏக
லகரம் றகரம் ஆகல் உம் பிற
வரின்
அகரம் விகற்பம் ஆகல் உம்
உள பிற 170
அல்வழி ஆ மா மியா முற்று
முன் மிகா 171

குறியதன் கீழ் ஆ குறுகல் உம்
அதன் ஓடு
உகரம் ஏற்றல் உம் இயல்பு உம்

ஆம் தூக்கின் 172
அன்றி இன்றி என்
வினையெஞ்சு இகரம்
தொடர்பின் உள் உகரம் ஆய்
வரின் இயல்பு ஏ 173
உரி வரின் நாழியின் ஈற்று
உயிர்மெய் கெட
மருவும் டகரம் உரியின் வழி ஏ
யகர உயிர்மெய் ஆம் ஏற்பன 174
வரின் ஏ
சுவை புளி முன் இன மென்மை
உம் தோன்றும் 175
அல்வழி இ ஐ முன்னர் ஆயின்
இயல்பு உம் மிகல் உம்
விகற்பம் உம் ஆகும் 176
ஆ முன் பகர ஈ அனைத்து உம்
வர குறுகும்
மேலன அல்வழி இயல்பு ஆகும்

ஏ 177

ப ஈ நீ மீ முன்னர் அல்வழி
இயல்பு ஆம் வலி மெலி மிகல்
உம் ஆம் மீ கு ஏ 178

மூன்று ஆறு உருபு எண்
வினைத்தொகை சுட்டு ஈறு
ஆகும் உகரம் முன்னர் இயல்பு
ஆம் 179

அது முன் வரும் அன்று ஆன்று
ஆம் தூக்கின் 180

வன் தொடர் அல்லன முன் மிகா
அல்வழி 181

இடை தொடர் ஆய்த தொடர்
ஒற்று இடையின்
மிகா நெடில் உயிர் தொடர் முன்
மிகா வேற்றுமை

182

நெடில் ஓடு உயிர் தொடர்

குற்றுகரங்கள் உள்
ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை
மிக ஏ 183

மென் தொடர் மொழி உள் சில
வேற்றுமை இல்
தம் இன வன் தொடர் ஆகா மன்
ஏ 184

ஐ ஈற்று உடை குற்றுகரம் உம்
உள ஏ 185

திசை ஒடு திசை உம் பிற உம்
சேரின்
நிலை ஈற்று உயிர்மெய் க ஒற்று
நீங்கல் உம்
றகரம் ன ல ஆ திரிதல் உம் ஆம்
பிற 186

தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய்
கெடும் காய் வரின் 187

எண் நிறை அளவு உம் பிற உம்
எய்தின்
ஒன்று முதல் எட்டு ஈறு ஆம்
எண் உள்
முதல் ஈர் எண் முதல் நீளும்
மூன்று ஆறு
ஏழ் குறுகும் ஆறு ஏழு
அல்லவற்றின்
ஈற்று உயிர்மெய் உம் ஏழன்
உயிர் உம்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர் 188
ஒன்றன் புள்ளி ரகரம் ஆக
இரண்டன் ஒற்று உயிர் ஏக உ
வரும் ஏ 189
மூன்றன் உறுப்பு அழிவு உம்
வந்தது உம் ஆகும் 190
நான்கன் மெய் ஏ ல ற ஆகும் ஏ 191
ஐந்தன் ஒற்று அடைவது உம்

இனம் உம் கேடு உம் 192
எட்டன் உடம்பு ண ஆகும்
என்ப 193

ஒன்பான் ஒடு பத்து உம் நூறு
உம் ஒன்றின்
முன்னது இன் ஏனைய முரணி
ஒ ஒடு
தகரம் நிறீஇ பஃது அகற்றி ன ஐ
நிரல் ஏ ண ள ஆ திரிப்பது நெறி
ஏ 194
முதல் இரு நான்கு ஆம் எண்
முனர் பத்தின்
இடை ஒற்று ஏகல் ஆய்தம்
ஆகல்
என இரு விதி உம் ஏற்கும்
என்ப 195
ஒருபஃது ஆதி முன் ஒன்று

முதல் ஒன்பான்
எண் உம் அவை ஊர் பிற உம்
எய்தின்
ஆய்தம் அழிய ஆண்டு ஆகும்
த ஏ 196

ஒன்று முதல் ஈர் ஐந்து ஆயிரம்
கோடி
எண் நிறை அளவு உம் பிற
வரின் பத்தின்
ஈற்று உயிர்மெய் கெடுத்து இன்
உம் இற்று உம்
ஏற்பது ஏற்கும் ஒன்பது உம்
இனைத்து ஏ 197
இரண்டு முன் வரின் பத்தின்
ஈற்று உயிர்மெய்
கரந்திட ஒற்று ன ஆகும் என்ப 198

ஒன்பது ஒழித்த எண் ஒன்பது

உம் இரட்டின்
முன்னதின் முன் அல ஓட உயிர்
வரின்
வ உம் மெய் வரின் வந்தது உம் 199
மிகல் நெறி
பூ பெயர் முன் இன மென்மை
உம் தோன்றும் 200
இடைச்சொல் ஏ ஓ முன் வரின்
இயல்பு ஏ 201
வேற்றுமை ஆயின் ஐகான் இறு
மொழி
ஈற்று அழிவு ஓடு உம் அம் ஏற்ப
உம் உள ஏ 202

பனை முன் கொடி வரின் மிகல்
உம் வலி வரின்
ஐ போய் அம் உம் திரள் வரின்
உறழ்வு உம்

அட்டு உறின் ஐ கெட்டு அ 203
நீள்வு உம் ஆம் வேற்றுமை

## 2.4.மெய்யீற்று புணரியல்

உடல் மேல் உயிர் வந்து
ஒன்றுவது இயல்பு ஏ 204
தனி குறில் முன் ஒற்று உயிர்
வரின் இரட்டும் 205
தன் ஒழி மெய் முன் ய வரின்
இகரம்
துன்னும் என்று துணிநர் உம்
உளர் ஏ 206
ஞ ண ந ம ல வ ள ன ஒற்று இறு
தொழிற்பெயர்
ஏவல் வினை நனி ய அல் மெய்
வரின்
உ உறும் ஏவல் உறா சில சில்

வழி 207
ந இறு தொழிற்பெயர் கு அ உம்
ஆம் வேற்றுமை 208
ண ன வல்லினம் வர ட ற உம்
பிற வரின்
இயல்பு உம் ஆகும் வேற்றுமை
கு அல்வழி கு
அனைத்து மெய் வரின் உம்
இயல்பு ஆகும் ஏ 209
குறில் அணைவு இல்லா ண
னக்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடு
ஏ 210
சாதி குழூஉ பரண் கவண் பெயர்
இறுதி
இயல்பு ஆம் வேற்றுமை கு
உணவு எண் சாண் பிற
ட ஆகல் உம் ஆம் அல்வழி உம்

ஏ 211
ணஃகான் கிளைப்பெயர் இயல்பு
உம் அஃகான்
அடைவு உம் ஆகும் வேற்றுமை
பொருள் கு ஏ 212
மீன் ற ஒடு பொரூஉம்
வேற்றுமை வழி ஏ 213
தேன் மொழி மெய் வரின்
இயல்பு உம் மென்மை
மேவின் இறுதி அழிவு உம் வலி
வரின்
ஈறு போய் வலி மெலி மிகல்
உம் ஆம் இரு வழி
214
மரம் அல் எகின் மொழி இயல்பு
உம் அகரம்
மருவ வலி மெலி மிகல் உம்
ஆகும் 215

குயின் ஊன் வேற்றுமை கண் 216
உம் இயல்பு ஏ
மின் பின் பன் கன்
தொழிற்பெயர் அனைய
கன் அ ஏற்று மென்மை ஓடு
உறழும் 217
தன் என் என்பவற்று ஈற்று ன
வன்மை ஓடு
உறழும் நின் ஈறு இயல்பு ஆம்
உற ஏ 218
ம ஈறு ஒற்று அழிந்து உயிர் ஈறு
ஒப்ப உம்
வன்மை கு இனம் ஆ திரிப உம்
ஆகும் 219
வேற்றுமை ம போய் வலி மெலி
உறழ்வு உம்
அல்வழி உயிர் இடை வரின்
இயல்பு உம் உள 220

நும் தம்
எம் நம் ஈறு ஆம் ம வரு ஞ ந ஏ 221
அகம் முனர் செவி கை வரின்
இடையன கெடும் 222
ஈம் உம்
கம் உம் உரும் உம்
தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமை கு அ உம்
பெறும் ஏ 223
ய ர ழ முன்னர் க ச த ப
அல்வழி
இயல்பு உம் மிகல் உம் ஆகும்
வேற்றுமை
மிகல் உம் இனத்து ஒடு உறழ்தல்
உம் விதி மேல்
224
தமிழ் அ உற உம் பெறும்
வேற்றுமை கு ஏ

தாழ் உம் கோல் வந்து உறுமேல் 225
அற்று ஏ
கீழின் முன் வன்மை விகற்பம்
உம் ஆகும் 226
ல ள வேற்றுமை இல் ற ட உம்
அல்வழி
அவற்று ஒடு உறழ்வு உம் வலி
வரின் ஆம் மெலி
மேவின் ன ண உம் இடை
வரின் இயல்பு உம்
ஆகும் இரு வழி ஆன் உம்
என்ப
227

குறில் வழி ல ள த அணையின்
ஆய்தம்
ஆக உம் பெறூஉம் அல்வழி
ஆன் ஏ 228
குறில் செறியா ல ள அல்வழி

வந்த
தகரம் திரிந்த பின் கேடு உம் ஈர்
இடத்து உம்
வரு ந திரிந்த பின் மாய்வு உம்
வலி வரின்
இயல்பு உம் திரிபு உம் ஆவன 229
உள பிற
ல ள இறு தொழிற்பெயர் ஈர்
இடத்து உம் உ உறா
வலி வரின் அல்வழி இயல்பு
உம் ஆவன உள 230
வல் ஏ தொழிற்பெயர் அற்று
இரு வழி உம்
பலகை நாய் வரின் உம்
வேற்றுமை கு அ உம் ஆம் 231
நெல் உம் செல் உம் கொல் உம்
சொல் உம்
அல்வழி ஆன் உம் றகரம்

ஆகும் 232
இல் என் இன்மை சொல் கு ஐ
அடைய
வன்மை விகற்பம் உம்
ஆகாரத்து ஒடு
வன்மை ஆகல் உம் இயல்பு
உம் ஆகும்
233

புள் உம் வள் உம்
தொழிற்பெயர் உம் மானும் 234
சுட்டு வகரம் மூ இனம் உற
முறை ஏ
ஆய்தம் உம் மென்மை உம்
இயல்பு உம் ஆகும் 235
தெவ் என் மொழி ஏ
தொழிற்பெயர் அற்று ஏ
ம வரின் வஃகான் ம உம் ஆகும் 236
ன ல முன் ற ன உம் ண ள முன்

ட ண உம்
ஆகும் த நக்கள் ஆயும்கால் ஏ 237
உருபின் முடிபவை ஒக்கும் அ
பொருளின் உம் 238
இடை உரி வடசொலின்
இயம்பிய கொளாத உம்
போலி உம் மரூஉ உம்
பொருந்திய ஆற்றின் கு
இயைய புணர்த்தல் யாவர் கு
உம் நெறி ஏ 239

## **2.5.** உருபு புணரியல்

ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல
என
வரு பெயர் ஐந்து ஒடு பெயர்
முதல் இரு நான்கு
உருபு உம் உறழ்தர நாற்பது

ஆம் உருபு ஏ 240
பெயர் வழி தம் பொருள் தர
வரும் உருபு ஏ 242
ஒற்று உயிர் முதல் ஈற்று
உருபுகள் புணர்ச்சியின்
ஒக்கும் மன் அ பெயர்
வேற்றுமை புணர்ப்பு ஏ 242
பதம் முன் விகுதி உம் பதம் உம்
உருபு உம்
புணர் வழி ஒன்று உம் பல உம்
சாரியை
வருதல் உம் தவிர்தல் உம்
விகற்பம் உம் ஆகும் 243
அன் ஆன் இன் அல் அற்று
இற்று அத்து அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிற உம் பொது சாரியை
ஏ

244

எல்லாம் என்பது இழிதிணை
ஆயின்
அற்று ஒடு உருபின் மேல் உம்
உறும் ஏ
அன்றேல் நம் இடை அடைந்து
அற்று ஆகும் 245
எல்லார் உம் எல்லீர் உம்
என்பவற்று உம்மை
தள்ளி நிரல் ஏ தம் நும் சார
புல்லும் உருபின் பின்னர் உம் ஏ 246
தான் தாம் நாம் முதல் குறுகும்
யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம் பிற
குவ்வின் அ வரும் நான்கு ஆறு
இரட்டல 247
ஆ மா கோ ன அணைய உம்
பெறும் ஏ 248

ஒன்று முதல் எட்டு ஈறு ஆம்
எண் ஊர்
பத்தின் முன் ஆன் வரின் ப
ஒற்று ஒழிய மேல்
எல்லாம் ஓடும் ஒன்பது உம் 249
இற்று ஏ
வ இறு சுட்டின் கு அற்று உறல்
வழி ஏ 250
சுட்டின் முன் ஆய்தம் அன்
வரின் கெடும் ஏ 251
அத்தின் அகரம் அகர முனை
இல்லை 252
இதன் கு இது சாரியை எனின்
அளவு இன்மையின்
விகுதி உம் பதம் உம் உருபு உம்
பகுத்து இடை
நின்ற எழுத்து உம் பதம் உம்
இயற்கை உம்

ஒன்ற உணர்த்தல் உரவோர் 253
நெறி ஏ
விகுதி பதம் சாரியை உருபு
அனைத்தின் உம்
உரைத்த விதியின் ஓர்ந்து
ஒப்பன கொளல் ஏ 254
இயல்பின் விகாரம் உம்
விகாரத்து இயல்பு உம்
உயர்திணை இடத்து விரிந்து
உம் தொக்கு உம்
விரவுப்பெயரின் விரிந்து உம்
நின்று உம்
அன்ன பிற உம் ஆகும் ஐ உருபு
ஏ 255
புள்ளி உம் உயிர் உம் ஆய் இறு
சொல் முன்
தம்மின் ஆகிய தொழில் மொழி
வரின் ஏ

வல்லினம் விகற்பம் உம் 256
இயல்பு உம் ஆகும்
இதன் கு இது முடிபு என்று
எஞ்சாது யா உம்
விதிப்ப அளவு இன்மையின்
விதித்தவற்று இயல் ஆன்
வகுத்து உரையாத உம்
வகுத்தனர் கொளல் ஏ 257

## 3. சொல்லதிகாரம்

### 3.1. பெயரியல்

மு சகம் நிழற்றும் முழு மதி மு
குடை
அச்சுதன் அடி தொழுது
அறைகுவன் சொல் ஏ 258
ஒருமொழி தொடர்மொழி

பொதுமொழி என்றா
இரு திணை ஐம் பால் பொருள்
ஐ உம் தன் ஐ உம்
மூ வகை இடத்து உம் வழக்கு
ஒடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின்
விரிப்பது சொல் ஏ 259
ஒருமொழி ஒரு பொருளன ஆம்
தொடர்மொழி
பல பொருளன பொது இருமை
உம் ஏற்பன 260
மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்று உயிர் உள்ள உம் இல்ல
உம் அஃறிணை
261
ஆண் பெண் பலர் என மு
பாற்று உயர்திணை 262
ஒன்று ஏ பல என்று இரு பாற்று

அஃறிணை 263

பெண்மை விட்டு ஆண்

அவாவுவ பேடு ஆண்பால்

ஆண்மை விட்டு அல்லது

அவாவுவ பெண்பால்

இருமை உம் அஃறிணை அன்ன

உம் ஆகும் 264

படர்க்கை வினைமுற்று நாமம்

குறிப்பின்

பெறப்படும் திணை பால்

அனைத்து உம் ஏனை

இடத்து அவற்று ஒருமை

பன்மை பால் ஏ 265

தன்மை முன்னிலை படர்க்கை

மூ இடன் ஏ 266

இலக்கணம் உடையது

இலக்கணப்போலி

மரூஉ என்று ஆகும் மூ வகை

இயல்பு உம்
இடக்கரடக்கல் மங்கலம்
குழூஉக்குறி
எனும் மு தகுதி ஒடு ஆறு ஆம் 267
வழக்கு இயல்
பல் வகை தாதுவின் உயிர் கு
உடல் போல் பல
சொல் ஆல் பொருள் கு இடன்
ஆக உணர்வின் இன்
வல்லோர் அணி பெற செய்வன
செய்யுள் 268
ஒன்று ஒழி பொது சொல்
விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி
வினைக்குறிப்பு ஏ
முதல் தொகை குறிப்பு ஒடு
இன்ன பிற உம்
குறிப்பின் தரு மொழி அல்லன

வெளிப்படை 269

## 3.1.1. சொற்பாகுபாடு

அது ஏ
இயற்சொல் திரிசொல்
இயல்பின் பெயர் வினை
என இரண்டு ஆகும் இடை உரி
அடுத்து
நான்கு உம் ஆம் திசை
வடசொல் அணுகா வழி 270
செந்தமிழ் ஆகி திரியாது யார் கு
உம்
தம் பொருள் விளக்கும்
தன்மைய இயற்சொல் 271
ஒரு பொருள் குறித்த பல சொல்
ஆகி உம்
பல பொருள் குறித்த ஒரு சொல்

ஆகி உம்
அரிது உணர் பொருளன
திரிசொல் ஆகும் 272
செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு
நிலத்தின் உம்
ஒன்பதிற்று இரண்டின் இல்
தமிழ் ஒழி நிலத்தின் உம்
தம் குறிப்பின ஏ திசைச்சொல்
என்ப 273
பொது எழுத்து ஆன் உம் சிறப்பு
எழுத்து ஆன் உம்
ஈர் எழுத்து ஆன் உம்
இயைவன வடசொல் 274

## 3.1.2. பெயர்ச்சொல்

இடுகுறி காரணம் மரபு ஒடு
ஆக்கம்

தொடர்ந்து தொழில் அல காலம்
தோற்றா
வேற்றுமை கு இடன் ஆய்
திணை பால் இடத்து ஒன்று
ஏற்ப உம் பொது உம் ஆவன
பெயர் ஏ 275

அவற்று உள்
கிளை எண் குழூஉ முதல் பல்
பொருள் திணை தேம்
ஊர் வான் அகம் புறம் முதல
நிலன் யாண்டு
இருது மதி நாள் ஆதி காலம்
தோள் குழல் மார்பு கண் காது
முதல் உறுப்பு (5)
அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம்
கதி
சாதி குடி சிறப்பு ஆதி பல்
குணம்

ஓதல் ஈதல் ஆதி பல் வினை
இவை அடை சுட்டு வினா பிற
மற்று ஓடு
உற்ற ன ஈறு நம்பி ஆடூஉ (10)
விடலை கோ வேள் குரிசில்
தோன்றல்
இன்னன ஆண் பெயர் ஆகும் 276
என்ப
கிளை முதல் ஆக கிளந்த
பொருள்கள் உள்
ள ஒற்று இகர கு ஏற்ற ஈற்ற உம்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையல் ஓடு இன்னன
பெண்பால் பெயர் ஏ 277
கிளந்த கிளை முதல் உற்ற ர
ஈற்ற உம்
கள் என் ஈற்றின் ஏற்ப உம் பிற
உம்

பல்லோர் பெயரின் பகுதி
ஆகும் 278
வினா சுட்டு உடன் உம் வேறு
உம் ஆம் பொருள்
ஆதி உறு து சுட்டு அணை
ஆய்தம்
ஒன்று என் எண் இன்னன
ஒன்றன் பெயர் ஏ 279
முன்னர் அவ் ஒடு வரு வை அ
உம்
சுட்டு இறு வ உம் கள் இறு
மொழி உம்
ஒன்று அல் எண் உம் உள்ள
இல்ல
பல்ல சில்ல உள இல பல சில
இன்ன உம் பலவின் பெயர்
ஆகும் ஏ 280

பால் பகா அஃறிணை பெயர்கள்

பால் பொதுமைய 281
முதற்பெயர் நான்கு உம்
சினைப்பெயர் நான்கு உம்
சினைமுதற்பெயர் ஒரு நான்கு
உம் முறை இரண்டு உம்
தன்மை நான்கு உம் முன்னிலை
ஐந்து உம்
எல்லாம் தாம் தான் இன்னன
பொது பெயர் 282
ஆண்மை பெண்மை ஒருமை
பன்மையின்
ஆம் அ நான்மைகள் ஆண்
பெண் முறைப்பெயர்
283

அவற்று உள்
ஒன்று ஏ இரு திணை தன் பால்
ஏற்கும் 284
தன்மை யான் நான் யாம் நாம்

முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ
அல்லன படர்க்கை எல்லாம் 285
எனல் பொது
வினையின் பெயர் ஏ படர்க்கை
வினையாலணையும்பெயர்
ஏ யாண்டு உம் ஆகும் 286
தான் யான் நான் நீ ஒருமை
பன்மை தாம்
யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர்
நீவிர்
287

ஒருவன் ஒருத்தி பெயர் மேல்
எண் இல 288
ஒருவர் என்பது உயர் இரு
பாற்று ஆய்
பன்மை வினை கொளும்
பாங்கிற்று என்ப 289

பொருள் முதல் ஆறு ஓடு
அளவை சொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதி
உள்
ஒன்றன் பெயர் ஆன் அதன் கு
இயை பிறிது ஐ
தொல் முறை உரைப்பன 290
ஆகுபெயர் ஏ
ஏற்கும் எ வகை பெயர் கு உம்
ஈறு ஆய் பொருள்
வேற்றுமை செய்வன எட்டு ஏ
வேற்றுமை 291
பெயர் ஏ ஐ ஆல் கு இன் அது
கண்
விளி என்று ஆகும் அவற்றின்
பெயர் முறை 292
ஆறன் உருபு உம் ஏற்கும் அ
உருபு ஏ 293

நீயிர் நீவிர் நான் எழுவாய் அல
பெறா 294

அவற்று உள்
எழுவாய் உருபு திரிபு இல்
பெயர் ஏ
வினை பெயர் வினா கொளல்
அதன் பயனிலை ஏ 295

இரண்டாவதன் உருபு ஐ ஏ
அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல்
நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும்
296

மூன்றாவதன் உருபு ஆல் ஆன்
ஒடு ஓடு
கருவி கருத்தா உடனிகழ்வு
அதன் பொருள் 297

நான்காவதன் கு உருபு ஆகும் கு

ஏ
கொடை பகை நேர்ச்சி தகவு
அதுவாதல்
பொருட்டு முறை ஆதியின் 298
இதன் கு இது எனல் பொருள் ஏ
ஐந்தாவதன் உருபு இல் உம்
இன் உம்
நீங்கல் ஒப்பு எல்லை ஏது
பொருள் ஏ 299
ஆறன் ஒருமை கு அது உம்
ஆது உம்
பன்மை கு அ உம் உருபு ஆம்
பண்பு உறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின்
ஈட்டம்
திரிபின் ஆக்கம் ஆம் தற்கிழமை
உம்
பிறிதின்கிழமை உம் பேணுதல்

பொருள் ஏ 300
ஏழன் உருபு கண் ஆதி ஆகும்
பொருள் முதல் ஆறு உம் ஓர்
இரு கிழமையின்
இடன் ஆய் நிற்றல் இதன்
பொருள் என்ப
301

கண் கால் கடை இடை தலை
வாய் திசை வயின்
முன் சார் வலம் இடம் மேல் கீழ்
புடை முதல்
பின் பாடு அளை தேம் உழை
வழி உழி உளி
உள் அகம் புறம் இல் இட
பொருள் உருபு ஏ 302
எட்டன் உருபு ஏ எய்து பெயர்
ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு

அயல்
திரிபு உம் ஆம் பொருள்
படர்க்கையோர் ஐ
தன் முகம் ஆக தான் 303
அழைப்பது ஏ
இ உ ஊ ஒடு ஐ ஓ ன ள ர ல
ய ஈற்று உயர்திணை ஓ ர அல்
இவற்று ஒடு
ணஃகான் ஆ ஈறு ஆகும் பொது
பெயர்
ஞ ந ஒழி அனைத்து ஈற்று
அஃறிணை விளிப்பன 304
இ மு பெயர் கண் இயல்பு உம்
ஏ உம்
இகர நீட்சி உம் உருபு ஆம் மன்
ஏ 305
ஐ இறு பொது பெயர் கு ஆய்
உம் ஆ உம்

உருபு ஆம் அல்லவற்று ஆய் உம் ஆகும் 306
ஒரு சார் ன ஈற்று உயர்திணை பெயர் கண்
அளபு ஈறு அழிவு அயல் நீட்சி அதன் ஒடு
ஈறு போதல் அவற்று ஒடு ஓ உறல்
ஈறு அழிந்து ஓ உறல் இறுதி ய ஆதல்
அதன் ஒடு அயல் திரிந்து ஏ உறல் ஈறு அழிந்து
அயல் ஏ ஆதல் உம் விளி உருபு ஆகும் 307
ளஃஃகான் உயர் பெயர் கு அளபு ஈறு அழிவு அயல்
நீட்சி இறுதி ய ஒற்று ஆதல்
அயல் இல் அகரம் ஏ ஆதல் உம்

விளி தனு 308
ர ஈற்று உயர் பெயர் கு அளபு
எழல் ஈற்று அயல்
அகரம் இ ஈ ஆதல் ஆண்டை
ஆ
ஈ ஆதல் அதன் ஒடு ஏ உறல்
ஈற்று ஏ
மிக்கு அயல் யா கெட்டு அதன்
அயல் நீடல்
ஈற்றின் ஈர் உறல் இவை உம்
ஈண்டு உருபு ஏ
309

லகார ஈற்று உயர் பெயர் கு
அளபு அயல் நீட்சி உம் 310
ன ஈற்று உயர்திணை அல் இரு
பெயர் கண்
இறுதி அழிவு அதன் ஒடு அயல்
நீட்சி 311

ல ள ஈற்று அஃறிணை பெயர்
பொது பெயர் கண்
ஈற்று அயல் நீட்சி உம் உருபு 312
ஆகும் ஏ

அண்மையின் இயல்பு உம் ஈறு
அழிவு உம் சேய்மையின்
அளபு உம் புலம்பின் ஓ உம்
ஆகும் 313
நு ஒடு வினா சுட்டு உற்ற ன ள ர
வை து தாம் தான் இன்னன
விளியா 314
முதல் ஐ ஐ உறின் சினை ஐ கண்
உறும்
அது முதல் கு ஆயின் சினை கு
ஐ ஆகும் 315
முதல் இவை சினை இவை என
வேறு உள இல
உரைப்போர் குறிப்பின அற்று ஏ

பிண்டம் உம் 316
யாதன் உருபின் கூறிற்று ஆயின்
உம்
பொருள் செல் மருங்கின்
வேற்றுமை சாரும் 317

ஐ ஆன் கு செய்யுள் கு அ உம்
ஆகும்
ஆகா அஃறிணை கு ஆன்
அல்லாதன 318
எல்லை இன் உம் அது உம்
பெயர் கொளும்
அல்ல வினை கொளும் நான்கு
ஏழ் இருமை உம்
புல்லும் பெரும்பாலும்
என்மனார் புலவர் 319

## 3.2. வினையியல்

## 3.2.1. வினைச்சொல்

செய்பவன் கருவி நிலம் செயல்
காலம்
செய் பொருள் ஆறு உம் தருவது
வினை ஏ 320
பொருள் முதல் ஆறின் உம்
தோற்றி முன் ஆறன் உள்
வினை முதல் மாத்திரை
விளக்கல் வினைக்குறிப்பு ஏ 321
அவை தாம்
முற்று உம் பெயர் வினை எச்சம்
உம் ஆகி
ஒன்றன் கு உரிய உம் பொது
உம் ஆகும் 322

## 3.2.2. வினைமுற்று

பொது இயல்பு ஆறு ஐ உம்
தோற்றி பொருட்பெயர்
முதல் அறு பெயர் அலது ஏற்பு
இல முற்று ஏ 323
ஒருவன் முதல் ஐந்து ஐ உம்
படர்க்கை இடத்து உம்
ஒருமை பன்மை ஐ தன்மை
முன்னிலையின் உம்
மு காலத்தின் உம் முரண முறை
ஏ
மூ ஐந்து இரு மூன்று ஆறு ஆய்
முற்று
வினைப்பதம் ஒன்று ஏ மூ
ஒன்பான் ஆம் 324
அன் ஆன் இறு மொழி
ஆண்பால் படர்க்கை 325
அள் ஆள் இறு மொழி
பெண்பால் படர்க்கை 326

அர் ஆர் ப ஊர் அகரம் மார்
ஈற்ற
பல்லோர் படர்க்கை மார் வினை
ஒடு முடிம் ஏ 327
து று டு குற்றியலுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை டு குறிப்பின்
ஆகும் 328
அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆ ஏ எதிர்மறை கண்ணது
ஆகும்
329

தன்மை முன்னிலை
வியங்கோள் வேறு இலை
உண்டு ஈர் எச்சம் இரு திணை
பொது வினை 330
கு டு து று என்னும்
குன்றியலுகரம் ஒடு
அல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற

இரு திணை மு கூற்று 331
ஒருமைத்தன்மை
அம் ஆம் என்பன
முன்னிலையார் ஐ உம்
எம் ஏம் ஓம் இவை
படர்க்கையார் ஐ உம்
உம் ஊர் க ட த ற இரு பாலார்
ஐ உம்
தன் ஒடு படுக்கும்
தன்மைப்பன்மை 332

செய்கு என் ஒருமை உம்
செய்கும் என் பன்மை உம்
வினை ஒடு முடியின் உம்
விளம்பிய முற்று ஏ 333
முன்னிலை கூடிய படர்க்கை
உம் முன்னிலை 334
ஐ ஆய் இகர ஈற்ற மூன்று உம்

ஏவலின் வரூஉம் எல்லா ஈற்ற
உம்
மு பால் ஒருமை முன்னிலை 335
மொழி ஏ

முன்னிலை முன்னர் ஈ உம் ஏ
உம்
அ நிலை மரபின் மெய் ஊர்ந்து
வரும் ஏ 336

இர் ஈர் ஈற்ற இரண்டு உம் இரு
திணை
பன்மை முன்னிலை மின்
அவற்று ஏவல் 337

க ய ஒடு ர ஒற்று ஈற்ற
வியங்கோள்
இயலும் இடம் பால் எங்கு உம்
என்ப 338

வேறு இல்லை உண்டு ஐம் பால்
மு இடத்தன 339

### 3.2.3. பெயரெச்சம்

செய்த செய்கின்ற செய்யும் என்
பாட்டு இல்
காலம் உம் செயல் உம் தோன்றி
பால் ஒடு
செய்வது ஆதி அறு
பொருட்பெயர் உம்
எஞ்ச நிற்பது பெயரெச்சம் ஏ 340
செய்யும் என் எச்ச ஈற்று
உயிர்மெய் சேறல் உம்
செய்யுள் உள் உம் உந்து ஆகல்
உம் முற்றேல்
உயிர் உம் உயிர்மெய் உம் ஏகல்
உம் உள ஏ 341

### 3.2.4. வினையெச்சம்

தொழில் உம் காலம் உம்

தோன்றி பால் வினை
ஒழிய நிற்பது வினையெச்சம் ஏ 342
செய்து செய்பு செய்யா செய்யூ
செய்தென செய செயின்
செய்யிய செய்யியர்
வான் பான் பாக்கு இன
வினையெச்சம் பிற
ஐந்து ஒன்று ஆறு மு காலம் உம்
முறை தரும் 343
அவற்று உள்
முதல் இல் நான்கு உம் ஈற்று
இல் மூன்று உம்
வினைமுதல் கொள்ளும் பிற
உம் ஏற்கும் பிற
344
சினை வினை சினை ஒடு உம்
முதல் ஒடு உம் செறியும் 345
சொல் திரியின் உம் பொருள்

திரியா வினைக்குறை 346

## 3.2.5. ஒழிபு

ஆக்க வினைக்குறிப்பு ஆக்கம்
இன்று இயலா 347
பல்லோர் படர்க்கை முன்னிலை
தன்மை இல்
செல்லாது ஆகும் செய்யும் என்
முற்று ஏ 348
யார் என் வினா வினைக்குறிப்பு
உயர் மு பால் 349
எவன் என் வினா வினை 350
குறிப்பு இழி இருபால்
வினைமுற்று ஏ வினையெச்சம்
ஆகல் உம்
குறிப்புமுற்று ஈர் எச்சம் ஆகல்
உம் உள ஏ 351

## 3.3. பொதுவியல்

இரு திணை ஆண் பெண் உள்
ஒன்றன் ஐ ஒழிக்கும்
பெயர் உம் வினை உம்
குறிப்பின் ஆன் ஏ 352
பெயர் வினை இடத்து ன ள ர ய
ஈற்று அயல்
ஆ ஓ ஆகல் உம் செய்யுள் உள்
உரித்து ஏ 353
உருபு உம் வினை உம்
எதிர்மறுத்து உரைப்பின் உம்
திரியா தத்தம் ஈற்று உருபு இன்
என்ப 354
உருபு பல அடுக்கின் உம்
வினை வேறு அடுக்கின் உம்
ஒரு தம் எச்சம் ஈறு உற முடியும் 355
உருபு முற்று ஈர் எச்சம்

கொள்ளும்
பெயர் வினை இடை பிற வரல் 356
உம் ஆம் ஏற்பன
எச்ச பெயர் வினை எய்தும்
ஈற்றின் உம் 357
ஒரு மொழி ஒழி தன் இனம்
கொளல் கு உரித்து ஏ 358
பொது பெயர் வினைகளின்
பொதுமை நீக்கும்
மேல் வரும் சிறப்பு பெயர்
வினை தாம் ஏ 359
பெயர் வினை உம்மை சொல்
பிரிப்பு என ஒழியிசை
எதிர்மறை இசை எனும் சொல்
ஒழிபு ஒன்பது உம்
குறிப்பு உம் தத்தம் எச்சம்
கொள்ளும் 360

## 3.3.1. தொகைநிலை தொடர்மொழி

பெயர் ஒடு பெயர் உம் வினை
உம் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின்
உருபு இடை
ஒழிய இரண்டு முதல் ஆ
தொடர்ந்து ஒரு
மொழி போல் நடப்பன
தொகைநிலை தொடர்ச்சொல் 361
வேற்றுமை வினை பண்பு
உவமை உம்மை
அன்மொழி என அ தொகை
ஆறு ஆகும்
362

இரண்டு முதல் ஆ இடை ஆறு
உருபு உம்

வெளிப்படல் இல்லது 363
வேற்றுமைத்தொகை ஏ
காலம் கரந்த பெயரெச்சம்
வினைத்தொகை 364
பண்பு ஐ விளக்கும் மொழி
தொக்கன உம்
ஒரு பொருள் கு இரு பெயர்
வந்த உம் குணத்தொகை 365
உவம உருபு இலது
உவமத்தொகை ஏ 366

போல புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்ப உம் பிற உம் உவமத்து
உருபு ஏ 367
எண்ணல் எடுத்தல் முகத்தல்
நீட்டல்

எனும் நான்கு அளவை உள் உம் 368
இலது அ தொகை

ஐம் தொகை மொழி மேல் பிற
தொகல் அன்மொழி 369

முன் மொழி பின் மொழி பல்
மொழி புற மொழி
எனும் நான்கு இடத்து உம்
சிறக்கும் தொகை பொருள் 370

வல் ஒற்று வரின் ஏ
இடத்தொகை ஆகும்
மெல் ஒற்று வரின் ஏ
பெயர்த்தொகை ஆகும் 371

உயர்திணை உம்மைத்தொகை
பலர் ஈறு ஏ 372

தொக்குழி மயங்குந இரண்டு
முதல் ஏழ்
எல்லை பொருளின் மயங்கும் 373
என்ப

## 3.3.2. தொகாநிலை தொடர்மொழி

முற்று ஈர் எச்சம் எழுவாய்
விளி பொருள்
ஆறு உருபு இடை உரி அடுக்கு
இவை தொகாநிலை 374

## 3.3.3. வழாநிலை வழுவமைதி

திணை ஏ பால் இடம் பொழுது
வினா இறை
மரபு ஆம் ஏழ் உம் மயங்கின்
ஆம் வழு ஏ 375
ஐயம் திணை பால் அ அ
பொதுவின் உம்
மெய் தெரி பொருள் மேல்
அன்மை உம் விளம்புப 376

உயர்திணை தொடர்ந்த பொருள்
முதல் ஆறு உம்
அதன் ஒடு சார்த்தின் அ திணை
முடிபின 377

திணை பால் பொருள் பல
விரவின சிறப்பின் உம்
மிகவின் உம் இழிபின் உம் ஒரு
முடிபின ஏ 378

உவப்பின் உம் உயர்வின் உம்
சிறப்பின் உம் செறலின் உம்
இழிப்பின் உம் பால் திணை
இழுக்கின் உம் இயல்பு ஏ 379

ஒருமையின் பன்மை உம்
பன்மையின் ஒருமை உம்
ஓர் இடம் பிற இடம் தழுவல்
உம் உள ஏ 380

தரல் வரல் கொடை செலல்
சாரும் படர்க்கை

எழுவாய் இரண்டு உம் எஞ்சிய 381
ஏற்கும்
இறப்பு எதிர்வு நிகழ்வு என
காலம் மூன்று ஏ 382
மு காலத்தின் உம் ஒத்து இயல்
பொருள் ஐ
செப்புவர் நிகழும் காலத்து ஆன் 383
ஏ
விரைவின் உம் மிகவின் உம்
தெளிவின் உம் இயல்பின் உம்
பிறழ உம் பெறூஉம் மு காலம்
உம் ஏற்புழி 384
அறிவு அறியாமை ஐயுறல்
கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறு உம்
இழுக்கார் 385
சுட்டு மறை நேர் ஏவல்
வினாதல்

உற்றது உரைத்தல் உறுவது
கூறல்
இனமொழி எனும் எண் இறை
உள் இறுதி
நிலவிய ஐந்து உம் அ
பொருண்மையின் நேர்ப 386

வினாவின் உம் செப்பின் உம்
விரவா சினை முதல் 387

எ பொருள் எ சொலின் எ ஆறு
உயர்ந்தோர்
செப்பினர் அ படி செப்புதல்
மரபு ஏ 388

வேறு வினை பல் பொருள்
தழுவிய பொது சொல் உம்
வேறு அவற்று எண் உம் ஓர்
பொது வினை வேண்டும் 389

வினை சார்பு இனம் இடம்
மேவி விளங்கா

பல பொருள் ஒரு சொல்
பணிப்பர் சிறப்பு எடுத்து ஏ 390

எழுத்து இயல் திரியா பொருள்
திரி புணர்மொழி
இசை திரிபு ஆல் தெளிவு
எய்தும் என்ப 391

ஒரு பொருள் மேல் பல பெயர்
வரின் இறுதி
ஒரு வினை கொடுப்ப தனியும்
ஒரோ வழி 392

திணை நிலம் சாதி குடி ஏ
உடைமை
குணம் தொழில் கல்வி சிறப்பு
ஆம் பெயர் ஒடு
இயற்பெயர் ஏற்றிடின் பின்
வரல் சிறப்பு ஏ 393

படர்க்கை மு பெயர் ஒடு
அணையின் சுட்டு

பெயர் பின் வரும் வினை
எனின் பெயர் கு எங்கு உம்
மருவும் வழக்கு இடை செய்யுள்
கு ஏற்புழி 394

அசைநிலை பொருள்நிலை
இசைநிறை கு ஒரு சொல்
இரண்டு மூன்று நான்கு எல்லை
முறை அடுக்கும் 395

இரட்டைக்கிளவி இரட்டு இன்
பிரிந்து இசையா 396

ஒரு பொருள் பல் பெயர் பிரிவு
இல வரையார் 397

ஒருபொருட்பன்மொழி
சிறப்பின் இன் வழா 398

இனைத்து என்று அறி பொருள்
உலகின் இலா பொருள்
வினைப்படுத்து உரைப்பின்

உம்மை வேண்டும் 399
செயப்படுபொருள் ஐ செய்தது
போல
தொழிற்பட கிளத்தல் உம்
வழக்கின் உள் உரித்து ஏ 400

பொருள் முதல் ஆறு ஆம்
அடை சேர் மொழி இனம்
உள்ள உம் இல்ல உம் ஆம் இரு
வழக்கின் உம் 401
அடை மொழி இனம் அல்லது
உம் தரும் ஆண்டு உறின் 402
அடை சினை முதல் முறை
அடைதல் உம் ஈர் அடை
முதல் ஒடு ஆதல் உம் வழக்கு
இயல் ஈர் அடை
சினை ஒடு செறிதல் உம்
மயங்கல் உம் செய்யுள் கு ஏ 403

இயற்கை பொருள் ஐ இற்று என
கிளத்தல் 404
காரணம் முதல் ஆ ஆக்கம்
பெற்று உம்
காரணம் இன்றி ஆக்கம் பெற்று
உம்
ஆக்கம் இன்றி காரணம் அடுத்து
உம்
இருமை உம் இன்றி உம்
இயலும் செயும் பொருள் 405
தம் பால் இல்லது இல் எனின்
இனன் ஆய்
உள்ளது கூறி மாற்றி உம்
உள்ளது
சுட்டி உம் உரைப்பர் சொல்
சுருங்குதல் கு ஏ 406

ஈ தா கொடு எனும் மூன்று உம்
முறை ஏ

இழிந்தோன் ஒப்போன்
மிக்கோன் இரப்பு உரை 407
முன்னத்தின் உணரும் கிளவி
உம் உள ஏ 408
கேட்குந போல உம் கிளக்குந
போல உம்
இயங்குந போல உம் இயற்றுந
போல உம்
அஃறிணை மருங்கின் உம்
அறையப்படும் ஏ 409
உருவக உவமை இல் திணை
சினை முதல்கள்
பிறழ்தல் உம் பிற உம்
பேணினர் கொளல் ஏ 410

## 3.3.4. பொருள்கோள்

யாற்றுநீர் மொழிமாற்று

நிரல்நிறை விற்பூண்
தாப்பிசை அளைமறிபாப்பு
கொண்டுகூட்டு
அடிமறிமாற்று என
பொருள்கோள் எட்டு ஏ 411
மற்றைய நோக்காது அடி தொறு
உம் வான் பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது
யாற்றுப்புனல் ஏ 412
ஏற்ற பொருள் கு இயையும்
மொழிகள் ஐ
மாற்றி ஓர் அடி உள் வழங்கல்
மொழிமாற்று ஏ 413
பெயர் உம் வினை உம் ஆம்
சொல் ஐ உம் பொருள் ஐ உம்
வேறு நிரல் நிறீஇ முறையின்
உம் எதிரின் உம்
நேரும்

பொருள்கோள்நிரல்நிறை நெறி 414
ஏ
எழுவாய் இறுதி நிலை மொழி
தம் உள்
பொருள் நோக்கு உடையது
பூட்டுவில் ஆகும் 415
இடை நிலை மொழி ஏ ஏனை
ஈர் இடத்து உம்
நடந்து பொருள் ஐ நண்ணுதல்
தாப்பிசை 416
செய்யுள் இறுதி மொழி இடை
முதலின் உம்
எய்திய பொருள்கோள்
அளைமறிபாப்பு ஏ
417

யாப்பு அடி பலவின் உம்
கோப்பு உடை மொழிகள் ஐ
ஏற்புழி இசைப்பது

கொண்டுகூட்டு ஏ 418
ஏற்புழி எடுத்து உடன் கூட்டுறும்
அடிய உம்
யாப்பு ஈறு இடை முதல்
ஆக்கின் உம் பொருள் இசை
மாட்சி உம் மாறா அடிய உம்
அடிமறி 419

## 3.4. இடையியல்

வேற்றுமை வினை சாரியை
ஒப்பு உருபுகள்
தத்தம் பொருள இசைநிறை
அசைநிலை
குறிப்பு என் எண் பகுதியின்
தனித்து இயல் இன்றி
பெயரின் உம் வினையின் உம்
பின் முன் ஓர் இடத்து

ஒன்று உம் பல உம் வந்து
ஒன்றுவது இடைச்சொல் 420
தெரிநிலை தேற்றம் ஐயம் முற்று
எண் சிறப்பு
எதிர்மறை எச்சம் வினா
விழைவு ஒழியிசை
பிரிப்பு கழிவு ஆக்கம் இன்னன
இடை பொருள் 421
பிரிநிலை வினா எண் ஈற்றசை
தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகாரம் ஏ 422
ஒழியிசை வினா சிறப்பு
எதிர்மறை தெரிநிலை
கழிவு அசைநிலை பிரிப்பு என
எட்டு ஓ ஏ 423
வினை பெயர் குறிப்பு இசை
எண் பண்பு ஆறின் உம்
என எனும் மொழி வரும் என்று

உம் அற்று ஏ 424
எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம்
முற்று அளவை
தெரிநிலை ஆக்கம் ஒடு உம்மை 425
எட்டு ஏ
முற்று உம்மை ஒரோ வழி
எச்சம் உம் ஆகும் 426
செவ்வெண் ஈற்றது ஆம் எச்ச
உம்மை 427
பெயர்ச்செவ்வெண் ஏ என்றா
எனா எண்
நான்கு உம் தொகை பெறும்
உம்மை என்று என ஒடு
இ நான்கு எண் உம் அஃது
இன்றி உம் இயலும் 428
என்று உம் என உம் ஒடு உம்
ஒரோ வழி
நின்று உம் பிரிந்து எண்

பொருள் தொறு உம் நேரும் 429
வினை ஒடு வரின் உம் எண்
இனைய ஏற்பன 430
விழைவு ஏ காலம் ஒழியிசை
தில் ஏ 431
மன் ஏ அசைநிலை ஒழியிசை
ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபேறு ஆகும் 432
வினைமாற்று அசைநிலை பிறிது
எனும் மற்று ஏ 433
மற்றையது என்பது சுட்டியதன்
கு இனம் 434
கொல் ஏ ஐயம் அசைநிலை
கூற்று ஏ 435
ஒடு உம் தெய்ய உம் இசைநிறை
மொழி ஏ 436
அந்தில் ஆங்கு அசைநிலை இட
பொருள ஏ 437

அம்ம உரையசை கேண்மின்
என்று ஆகும் 438
மா என் கிளவி வியங்கோள்
அசைச்சொல் 439
மியா இக மோ மதி அத்தை
இத்தை
வாழிய மாள ஈ யாழ
முன்னிலை அசை 440
யா கா பிற பிறக்கு அரோ போ
மாது இகும்
சின் குரை ஒரும் போலும்
இருந்து இட்டு
அன்று ஆம் தாம் தான் கின்று
நின்று அசைமொழி
441

## 3.5. உரியியல்

பல் வகை பண்பு உம் பகர்
பெயர் ஆகி
ஒரு குணம் பல குணம் தழுவி
பெயர் வினை
ஒருவா செய்யுள் கு உரியன
உரிச்சொல் 442

உயிர் உயிர் அல்லது ஆம்
பொருள் குணம் பண்பு ஏ 443

ஒன்று முதல் ஆ கீழ் கொண்டு
மேல் உணர்தலின்
ஓர் அறிவு ஆதி ஆ உயிர் ஐந்து
ஆகும் 444

புல் மரம் முதல உற்று அறியும்
ஓர் அறிவு உயிர் 445

முரள் நந்து ஆதி நா அறிவு ஒடு
ஈர் அறிவு உயிர் 446

சிதல் எறும்பு ஆதி மூக்கு
அறிவின் மூ அறிவு உயிர் 447

தும்பி வண்டு ஆதி கண்
அறிவின் நால் அறிவு உயிர் 448
வானவர் மக்கள் நரகர் விலங்கு
புள்
ஆதி செவி அறிவு ஒடு ஐ அறிவு
உயிர் ஏ 449
உணர்வு இயல் ஆம் உயிர்
ஒன்று உம் ஒழித்த
உடல் முதல் அனைத்து உம்
உயிர் அல் பொருள் ஏ 450
ஒற்றுமை நயத்தின் ஒன்று என
தோன்றின் உம்
வேற்றுமை நயத்தின் வேறு ஏ
உடல் உயிர் 451
அறிவு அருள் ஆசை அச்சம்
மானம்
நிறை பொறை ஓர்ப்பு
கடைப்பிடி மையல்

நினைவு வெறுப்பு உவப்பு
இரக்கம் நாண் வெகுளி
துணிவு அழுக்காறு அன்பு
எளிமை எய்த்தல்
துன்பம் இன்பம் இளமை மூப்பு
இகல்
வென்றி பொச்சாப்பு ஊக்கம்
மறம் மதம்
மறவி இனைய உடல் கொள்
உயிர் குணம் 452

துய்த்தல் துஞ்சல் தொழுதல்
அணிதல்
உய்த்தல் ஆதி உடல் உயிர்
தொழில் குணம் 453

பல் வகை வடிவு இரு நாற்றம் ஐ
வண்ணம்
அறு சுவை ஊறு எட்டு உயிர்
அல் பொருள் குணம் 454

தோன்றல் மறைதல் வளர்தல்
சுருங்கல்
நீங்கல் அடைதல் நடுங்கல்
இசைத்தல்
ஈதல் இன்னன இரு பொருள்
தொழில் குணம் 455
சால உறு தவ நனி கூர் கழி
மிகல் 456
கடி என் கிளவி காப்பு ஏ கூர்மை
விரை ஏ விளக்கம் அச்சம்
சிறப்பு ஏ
விரைவு ஏ மிகுதி புதுமை
ஆர்த்தல்
வரைவு ஏ மன்றல் கரிப்பின்
ஆகும் 457
மாற்றம் நுவற்சி செப்பு உரை
கரை நொடி இசை
கூற்று புகறல் மொழி கிளவி

விளம்பு அறை
பாட்டு பகர்ச்சி இயம்பல் சொல்
ஏ 458
முழக்கு இரட்டு ஒலி கலி இசை
துவை பிளிறு இரை
இரக்கு அழுங்கு இயம்பல்
இமிழ் குளிறு அதிர் குரை
கனை சிலை சும்மை கௌவை
கம்பலை
அரவம் ஆர்ப்பு ஒடு இன்னன
ஓசை 459
இன்னது இன்னுழி இன்னணம்
இயலும்
என்று இசை நூல் உள் குண
குணிப்பெயர்கள்
சொல்லாம் பரத்தலின் பிங்கலம்
முதல் ஆ
நல்லோர் உரிச்சொல் இல்

நயந்தனர் கொளல் ஏ 460
சொல் தொறு உம் இற்று இதன்
பெற்றி என்று அனைத்து உம்
முற்ற மொழிகுறின் முடிவு இல
ஆதலின்
சொற்றவற்று இயல் ஆன்
மற்றைய பிற உம்
தெற்று என உணர்தல்
தெள்ளியோர் திறன் ஏ 461
பழையன கழிதல் உம் புதியன
புகுதல் உம்
வழு அல கால வகையின் ஆன்
ஏ 462

நன்னூல் முற்றிற்று.

This page was first put up on March 26, 2002

Please send your comments and corrections to the Webmaster(s) of this site